# முன்னுரிமை முதன்மைப் பராமரிப்பு மையங்கள்

**OFFICIAL**
**Tamil | தமிழ்**

- நீங்கள் அவசரமாக மருத்துவர் ஒருவரைப் பார்க்க வேண்டுமா?
- முன்னுரிமை முதன்மைப் பராமரிப்பு மையங்கள் (PPCCs) அவசர சிகிச்சைக்கான காயங்கள் அல்லது நோய் உள்ள எவருக்கும் இலவச சிகிச்சை அளிக்கின்றன.
- PPCC மருத்துவர்கள் உங்களுக்கு தேவையான சிகிச்சையை ஒரு மருத்துவமனை அவசர சிகிச்சை பிரிவில் பெறுவதை விட விரைவாகப் பெற உதவுவார்கள்.
- இலேசான தொற்றுகள், சிறிய தீக்காயங்கள், தசைப்பிடிப்புகள் அல்லது சந்தேகத்திற்கிடமான எலும்பு முறிவு போன்ற நிலைமைகளில் அவர்கள் சிகிச்சை அளிக்க முடியும்.
- உங்களுக்குக் கடுமையான காயம் அல்லது நோய் இருந்தால், மூன்று பூஜ்யம் (000) என்ற எண்ணை அழைக்கவும்.
- உங்களுக்கு அவசர சிகிச்சை தேவையில்லை என்றால், உங்கள் வழக்கமான மருத்துவரிடம் சந்திப்பு ஏற்பாடு (appointment) ஒன்றினைச் செய்யவும்.
- PPCC சேவைகளில் நோயியல் (pathology), கதிரியக்கவியல் (radiology) மற்றும் மருந்தியல் (pharmacy) ஆகியவை அடங்கும்.
- PPCC சேவைகள் 'மெடிகேர்'அட்டை உள்ள அல்லது இல்லாத அனைவருக்கும் இலவசம்.
- முன்னுரிமை முதன்மைப் பராமரிப்பு மையங்கள் கூடுதலான நேரங்களுடன் வாரத்தில் ஏழு நாட்களும் திறந்திருக்கும்.
- உங்கள் சந்திப்பு ஏற்பாடு (appointment) முன்னதாகச் செய்யத் தேவையில்லை
- விக்டோரியா முழுவதும் முன்னுரிமை முதன்மைப் பராமரிப்பு மையங்கள் திறக்கப்படுகின்றன.
- அமைந்திருக்கும் இடங்கள் மற்றும் கூடுதல் தகவல்களுக்கு Better Health Channel -க்குச் செல்லவும்: www.betterhealth.vic.gov.au/health/servicesandsupport/priority-primary-care-centres
- முன்னுரிமை முதன்மைப் பராமரிப்பு மையங்களில் மொழிபெயர்த்துரைப்பாளர்கள் கிடைப்பர். மொழிபெயர்த்தல் மற்றும் மொழிபெயர்த்துரைத்தல் சேவைக்கு, TIS National -ஐ 131 450 என்ற எண்ணில் அழைக்கவும்.